2011 ஜனவரி 10]

அரசு கொடுத்த அந்த வழிகாட்டல் நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு நாங்கள் அந்த நிதியைப் பயன்படுத்தி இதுபோன்ற கட்டடங்கள் உருவாக்க முடியும். அதற்கான சூழலையும் அரசு ஏற்படுத்தித் தருவதற்கு முன்வருமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களுடைய கருத்தையும் அரசு பரிசிலித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-50

4. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்பெற்றதை மறுபரிசீலனை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 9 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கப்பட்டதுடன், அவர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் அனைத்தும் இரத்து செய்யப்படும் என்றும் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரையும் இல்லையே! எல்லோரையும் சொல்லவில்லையே!

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: 9 பேர்கள் என்று சொன்னேன். கூட்டத் தொடர் முழுவதும் 9 பேர் என்று சொன்னேன். ஆகவே, அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகிறோம். காரணம், அன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஆளுநருடைய உரை. ஆளுநர் உரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது, சபாநாயகரைப் பொறுத்தவரையிலும் எந்த வெளியேற்ற நடவடிக்கையும் எடுக்கமுடியாது என்பது விதியிலே இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே ஆளுநர் உரை ஆற்றிக்கொண்டிருந்த நேரத்தில், அங்கே இருக்கின்ற எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் கோஷம் இட்டபோது, ஆளுநர் வெளியேறினாரே தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியேற்றப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இங்கு ஒரு சட்டம், அங்கு ஒரு சட்டம் என இந்தியாவிலே இருக்கிறதா என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு, இந்தச் சட்டமன்றம்தான் முடிவு கட்டவேண்டுமே தவிர, வேறு எந்தச் சட்டமன்றமும் இந்தச் சட்டமன்றத்திற்கு வழிகாட்டுதல் ஆகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது, இந்த அவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அந்த நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இந்த அவையைக் கட்டுப்படுத்தும். அதை மீறி தொடர்ந்து பேசுவதற்கு இந்த அவையில் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன், நான் சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். இது அவையால் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு சொல்லப்பட்டது. அதனால், இனி வேண்டுகோள் வைக்கவேண்டுமானால், அவை மூலமாக வைக்கமுடியுமே தவிர, அவை மூலமாக, தீர்மானம் நிறைவேற்றித்தான் தீர்ப்பை வாபஸ் வாங்க முடியுமே தவிர வேறல்ல. (குறுக்கீடுகள்) சரி சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இன்று. அன்றைக்கு நடைபெற்றது வேறு. அதைத்தான் நான் சுட்டிக்காட்டினேனே தவிர, இன்று நீங்கள் அவையின் சார்பாக, தீர்மானம் நிறைவேற்றி வெளியேற்றப்பட்டதைப்பற்றி நான் எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், ஆளுநர் இருந்தபோது, ஆளுநர் அங்கே அமர்ந்துகொண்டு அவர் செயலாற்றியபோது, சபாநாயகராக இருக்கின்ற நீங்கள் எப்படி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அன்றைக்குத் தீர்ப்பு அளிக்கின்றபோது, வெளியேற்ற உத்தரவிடுகின்ற நேரத்திலே தெளிவாகச் சொன்னீர்கள். ஆளுநர் அவர்களுடைய அனுமதியோடுதான் வெளியேற்றுகிறேன் என்று சொன்னீர்களே தவிர, தன்னிச்சையாகச் சொல்லவில்லை. மேலும், கர்நாடகாவிலே ஆளுநர் வெளியேறினார் என்று சொல்வது இங்கே பொருந்தாது. அதுமட்டுமல்; இந்தச் சபை கூட வேண்டுமென்று அனுமதி தருவதே ஆளுநர்தான். அவர் எதற்காக வெளியேறவேண்டும்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உங்கள் வேண்டுகோளை வைத்துவிட்டீர்கள். உட்காருங்கள். அவ்வளவுதான். No இனி அந்த subject-ஐ open பண்ணாதீர்கள்.

5. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9-(1)ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் பதினைந்தாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன். (குறுக்கீடுகள்)

திரு. மு. அப்பாவு

திரு. நா. இராமகிருஷ்ணன்

[திரு. குத்தாலம் க. அன்பழகன்] [2011 ஜனவரி 10

அடுத்த தலைமுறையை அடையாளம் கண்டு, முகவரி தந்து, பல்வேறு பொறுப்புகளைத் தந்து வழிநடத்திச் செல்கின்ற உழைப்பின் சின்னம், அவர் பெற்றிருக்கிற உயர்வு, விலாசத்தினால் மட்டும் கிடைத்ததல்ல. அவர் சிந்திய வியர்வையால் விளைந்தது என அனைவராலும் பாராட்டப்படுகிற இந்திய உபகண்டத்தின் ஈடு இணையற்ற இளம் தலைமுறையின் தலைவர், எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்பெற்றதை மறுபரிசீலனை செய்யக் கோருதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகள், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் தாங்கள் தந்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டார். கேட்பதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதைத் தங்களால் மறுபரிசீலனை செய்ய முடியாது; அது தங்களுடைய காரியம் அல்ல. அந்தப் பிரச்சினை வரையிலும்தான் கேட்கலாம். ஆனால் நடந்து முடிந்தவற்றைப் பற்றி இங்கே பேச முடியாது. தங்கள் தீர்ப்பில் தலையிட முடியாது. அதே கோரிக்கையைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் கேட்குமானால் *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, *(குறுக்கீடுகள்)* இல்லை, கேட்கவில்லை. நீங்கள் கேட்பதற்குத்தான் நான் கேட்கிறேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. *(குறுக்கீடுகள்)* Allow பண்ணச் சொல்கிறேன், allow பண்ணச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* No, no, I also request Hon'ble Speaker. ஆகையினால், அ.இ.அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்.

அந்தக் கோரிக்கைக்கு சபாநாயகர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்றால், நீங்கள் உட்காரலாம் என்று. அடுத்து, அவரவர்கள் என்ன கோரிக்கை என்று சொல்லலாம். *(குறுக்கீடுகள்)* சொல்லலாம். சொல்லிவிட்ட பிறகு உட்கார வைத்துவிடுவோம். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நான் சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் ஏற்கெனவே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறீர்கள். *(குறுக்கீடு)* நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அந்தக் கோரிக்கையை நீங்கள் அரசுக்கு, ஆளுங்கட்சிக்கு வைத்திருக்கிறீர்கள். அவர்கள் முடிவெடுத்துச் சொல்லட்டும். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* செல்வி கே. பாலபாரதி, என்னவென்று சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் விஷயத்தை மாத்திரம் சொல்லுங்கள். எங்களுக்குத் தெரியும்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய மேதகு ஆளுநர் அவர்களை மதிக்க வேண்டிய, அவர்களுடைய உரையைக் கேட்க வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது. ஆளும் அரசுக்கும் இருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அந்த மரபுகளை நாங்கள் யாரும்.. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, no, no இங்கேதான் நான் மாறுபடுகிறேன். ஆளுநர் உரை நடந்து முடிந்தது. அன்றைக்கு ஏற்பட்ட ஒரு நிகழ்வு குறித்து தாங்கள் ஒரு தீர்ப்பைச் சொல்லி, அதன்மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு விட்டது. மீண்டும் ஆளுநர் உரையைப் பற்றி இங்கே பேசக் கூடாது. தாங்கள் தந்த தீர்ப்பை பற்றி ஏதாவது கருத்து சொல்ல வேண்டுமானால் சொல்லலாம். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பு கடுமையானதாக இருக்கிறது. ஆளும் அரசுக்கு, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு, இந்தச் சபைக்கு 10 கடமைகள், பாதுகாக்க வேண்டிய கடமைகள் இருக்கின்றனவென்று சொன்னால் எதிர்க்கட்சிகளினுடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டிய 11-வது கடமையும் உங்களுக்குத்தான் இருக்கிறது. ஆகவே, அந்த முறையில் நடந்து முடிந்த சம்பவங்களை விடுத்து, அடுத்து மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்கு எடுத்த நடவடிக்கையின்மீது நீங்கள் கருணைகூர்ந்து மறுபரிசீலனை செய்து நாளையதினம் அந்த நடவடிக்கைக்குட்பட்ட உறுப்பினர்களை சபைக்கு வரவழைக்க தாங்கள் பரிசீலிக்க வேண்டும்படி மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டியது அனைவரின் பொறுப்பு. அந்தப் பொறுப்போடு அன்றைக்கு எதிர்க்கட்சிகள் நடந்துகொண்டார்களா என்பதை செல்வி பாலபாரதி சிந்தித்துப் பார்க்கலாம். ஏன், பாலபாரதியே அன்றைக்கு மிரண்டு போய் இருந்தாரே! (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, நீங்கள் மரியாதை குறைவாக பேசிக்கொண்டே இருக்கிறீர்கள், எச்சரிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஒன்பது பேர்கள்மீது நடவடிக்கை குறித்து நீங்கள் தீர்ப்பை அறிவித்திருக்கிறீர்கள். சபையிலே இதுபோன்ற நடவடிக்கைகள் பல முறை இருந்திருக்கின்றன என்றாலும், இந்த நடவடிக்கை என்பது கடுமையானதாக இருக்கிறது. அவர்களுடைய செயல்பாடே

முடக்கிவைக்கப்படும் என்ற நடவடிக்கையோடு மட்டுமல்லாமல், அதையும் இணைத்துக் கூறியிருக்கிறீர்கள். ஆகவே, இந்தக் கடுமையான நடவடிக்கையைத் திரும்பப் பெற்று, சபை உறுப்பினர்கள் ஜனநாயகக் கடமையாற்றுவதற்கு அனுமதிக்கவேண்டும். இப்படிப்பட்ட மரபுகள் எதிர்க்கட்சிகளால் கேட்டுக்கொள்ளப்படுவதும், அதைத் திரும்பப் பரிசீலித்து அவர்களை கடமையாற்றச் செய்வதும் நடைமுறையிலே இருக்கின்ற ஒன்று என்கின்ற காரணத்தினாலே அவர்களை இன்றையதினமே அவைக்கு அழைக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிவிடட்டுமே! மாண்புமிகு அமைச்சர், அவர் பேசிவிடட்டும். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சின்னசாமி, திரும்பத் திரும்ப எச்சரிக்கிறேன். நீங்கள் ரொம்ப over-ஆகப் போய்க்கொண்டிருக்கிறீர்கள். அவையிலிருந்து வெளியேற்றும் நிலைமை ஏற்படும். நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். திரு. ஆர். சின்னசாமி, திரும்பத் திரும்ப எச்சரிக்கிறேன், be careful (குறுக்கீடு) டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், என்ன? சொல்லுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 9 பேர் மேல் எடுத்த நடவடிக்கை மிகவும் அதிகமாகத் தெரிகிறது. இதைத் தாங்கள் மறுபரிசிலனை செய்து இந்தத் தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையால் நடவடிக்கை எடுக்கப்பட்ட உறுப்பினர்களை மறுபரிசீலனை செய்து அவர்களைத் திரும்ப அவைக்குள் அழைக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் அந்தப் பிரச்சினைக்குள் வரவில்லை. அந்த முடிவை உங்களிடம் விட்டுவிடுகிறேன். ஆனால், இதே அவையில் கடந்த 5-7-1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். அன்றைக்கு, மாண்புமிகு உறுப்பினர்

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட இந்த அவையிலே இருந்தார்கள். அன்றைக்கு இருந்த ஆளுநர் உரையாற்றியபோது, அப்போது பா.ம.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்த மரியாதைக்குரிய திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் அவருடைய கருத்தை இந்த அவையிலே ஆங்கிலத்திலே சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது பின்னால் இருந்த அன்றைய அ.இ.அ.தி.மு.க உறுப்பினர் திரு. தாமரைக்கனிக்கு தமிழ் உணர்வு பொங்கிவிட்டது. ஆளுநர் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது நீ என்ன ஆங்கிலத்தில் பேசுகிறாய் என்று வேகமாக அவருடைய இருக்கையிலிருந்து விரைந்து வந்தார், அவருடைய முதுகிலே அடித்தார். அதைக்கூட அன்றைய பேரவைத் தலைவர், ஓங்கித் தட்டினார் என்று அதனை நியாயப்படுத்திப் பேசினார். அதன்பிறகு, அன்றைய அலுவல் ஆய்வுக் குழுவில் அன்றைய முதலமைச்சர் கோரிக்கை வைத்ததாகவும், அதற்கு அடுத்த நாள் சபையிலே அவருடைய கோரிக்கையை ஏற்று சபாநாயகர் இதேபோன்ற ஒரு தீர்ப்பை அறிவித்தார். என்ன தீர்ப்பு தெரியுமா? அடித்தவருக்கும் ஒரே தண்டனை. அடி வாங்கியவருக்கும் ஒரே தண்டனை. இப்படியெல்லாம், நிறைவேற்றிய நீங்கள் இன்றைக்கு கோரிக்கை வைக்கிறீர்களே, அதையும், இதையும் கொஞ்சம் மனசாட்சியோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. எதிர்க்கட்சியினர் நீங்கள் அனைவரும் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். பரிசீலிக்கப்படும் என்று அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) விடுங்கள். மற்ற subject-க்குப் போங்கள்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், நீங்கள் பேசுங்கள்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, சட்டப் பேரவைப் பணிக்கு எனக்கு வாய்ப்பளிக்கும்

2011 ஜனவரி 10] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

வகையில் என்மீது மிகுந்த அக்கறையுடனும், அதேநேரத்தில் கண்டிப்புடனும், உறுதுணையாக விளங்கும் பெயருக்கு ஏற்றாற்போல் விளங்கி வரும் நம்முடைய அரசுக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை என்பது அரசின் . . .

4. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்பெற்றதை மறுபரிசீலனை செய்யக் கோருதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து மறுபடியும் இந்த அவையில் வாதிப்பதற்கு உரிமை கிடையாது. ஒருவேளை அதைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய அவசியம் பேரவைத் தலைவர் அவர்களுக்கு இருக்குமானால், அது அவை நடவடிக்கைக் குழுவிலேதான்-- Business Advisory Committee-யிலேதான்-- அதைப்பற்றி வாதிக்கலாமே தவிர, இந்த அவையினுடைய மொத்த நடவடிக்கையைத் தடுக்கக்கூடிய அளவிற்கு தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று இங்கே ஒரு போராட்டத்தைப்போல தொடர்ந்து தடை செய்வது, கூச்சல் எழுப்புவது அன்றைக்கு நடந்த நிகழ்ச்சியை மறுபடியும் உறுதிப்படுத்துவதாக இருக்கிறதே தவிர வேறு அல்ல.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், திரும்பத் திரும்பச் சொன்னாலும் இதையேதான் சொல்லிக்கொண்டிருக்கப் போகிறீர்கள். உட்காருங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)